ஜெர்மனிக்கு அதிர்ச்சி

ஜூன். 30:

4 முறை FIFA கால்பந்து உலக கோப்பை வென்ற ஜெர்மனி அணி, பராகுவே அணியிடம் தோற்று நடப்பு தொடரில் இருந்து வெளியேறியதால் ரசிகர்கள் அதிர்ச்சி.

நாக்அவுட் சுற்று போட்டி 1-1 என சமனில் முடிந்ததால், பெனால்டி முறையில் அதிக கோல்கள் அடித்து பராகுவே அடுத்த சுற்றுக்குத் தகுதி.

2014ல் கடைசியாக கோப்பை வென்ற ஜெர்மனி, 2018 மற்றும் 2022ல் குரூப் சுற்றிலேயே வெளியேறியது.

ஆப்கானில் மீண்டும் பதற்றம்

ஜூன். 30:

ஆப்கானிஸ்தானின் கியான், பக்தியா, குனார் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று நள்ளிரவு பாகிஸ்தான் நடத்திய விமானப்படை தாக்குதலில் 35 பேர் பலி. 160க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக தகவல். பிராந்திய அமைதி மற்றும் நிலைத்தன்மைக்கு எதிரான நேரடித் தாக்குதல் என இந்தியா கண்டனம்.

தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,160 குறைந்தது!

ஜூன். 30:

சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,160 குறைந்து ரூ.1,04,240-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை ஒரு கிராமுக்கு ரூ.270 குறைந்து ரூ.13,030-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லறை வர்த்தகத்தில் வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.240 க்கு விற்பனையாகிறது.

சிறார்கள் கார், இருசக்கர வாகனம் ஓட்டினால் பெற்றோருக்கு ரூ.25,000 வரை அபராதம்

ஜூன். 30:

18 வயது நிறைவடையாத சிறார்கள் கார், இருசக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றம்.

பெற்றோருக்கு ரூ.25,000 வரை அபராதம் & 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை. ஓட்டிய வாகனத்தின் பதிவு சான்றிதழ் (ஆர்.சி) ரத்து செய்யப்படும். 25 வயதாகும் வரை ஓட்டுநர் உரிமம் வழங்கப்படாது - தமிழ்நாடு காவல்துறை.



ஜூன். 30:

தமிழக அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் தனியுரிமையை பாதுகாக்கும் பொருட்டும், மருத்துவச் சேவைகள் தடையின்றி நடப்பதை உறுதிசெய்யும் வகையிலும், அங்கு 'ரீல்ஸ்' போன்ற வீடியோக்களை எடுக்க தமிழக சுகாதாரத்துறை அதிரடியாகத் தடை விதித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில்,

அனுமதியின்றி சிகிச்சைகளை வீடியோ எடுப்பது சட்டப்படி குற்றம் என்றும், விதிகளை மீறி ரீல்ஸ் அல்லது வீடியோ எடுப்பவர்கள் மீது கடும் சட்டப்பூர்வ நடவடிக்கை பாயும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சமூக வலைத்தள மோகத்தால் நோயாளிகளின் அமைதியும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளும் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

மேயர் ராஜினாமா கோரி அமளி; காங்கிரஸ் பாஜ கவுன்சிலர்கள் மோதலில் 4 பேர் காயம், 5 நிமிடத்தில் கூட்டம் ஒத்திவைப்பு.

திருவனந்தபுரம் மாநகராட்சியில் 35வது வார்டு பாஜ கவுன்சிலரான சுகுதன் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் தொடர்ந்து 3 மாநகராட்சி கூட்டங்களில் கலந்து கொள்ளாததால் அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ், இடதுசாரி கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் அலுவலகத்திற்கு வந்த மேயர் வி.வி.ராஜேஷை கம்யூனிஸ்ட் கவுன்சிலர்கள் அலுவலகத்திற்குள் நுழைய விடாமல் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அப்போது ஏற்பட்ட மோதலில் மேயர் வி.வி. ராஜேஷ், துணை மேயர் ஆஷாநாத் உள்பட 15 பேர் காயமடைந்தனர். இந்நிலையில் திருவனந்தபுரம் மாநகராட்சி கூட்டம் நேற்று நடைபெற்றது இந்தக் கூட்டத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்போவதாக காங்கிரஸ் தெரிவித்திருந்தது. இதற்கு இடதுசாரி கூட்டணியின் ஆதரவை காங்கிரஸ் கோரியது. ஆனால் அதை இடதுசாரி கூட்டணி ஏற்கவில்லை. நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்படுமா என்ற பரபரப்புடன் நேற்றைய மாநகராட்சி கூட்டம் தொடங்கியது. சமீபத்தில் காலமான பிரபல மலையாள நடிகர் சலீம்குமாருக்கு இரங்கல் தெரிவித்து கூட்டம் தொடங்கியது.

கூட்டம் தொடங்கிய உடனேயே மேயர், துணை மேயர் ஆகியோர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறி கம்யூனிஸ்ட் கவுன்சிலர்கள் கூட்ட அரங்கின் மையப்பகுதிக்கு வந்து கோஷமிட்டனர். அப்போது செம்பழந்தி உதயன் என்ற பாஜ கவுன்சிலர் வருகைப் பதிவேட்டை காங்கிரஸ் கவுன்சிலர்களிடமிருந்து பறிக்க முயன்றார். இதற்கு காங்கிரஸ் கவுன்சிலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அப்போது அவர்களிடையே கடும் அடிதடி, மோதல் ஏற்பட்டது. இதில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பெண் கவுன்சிலர்களான ஷெர்லி, அனிதா அலெக்ஸ் மற்றும் பாஜ கவுன்சிலர்களான செம்பழந்தி உதயன் மற்றும் அர்ச்சனா ஆகியோர் காயமடைந்தனர். செம்பழந்தி உதயனின் சட்டை கிழிந்தது. இந்த சம்பவத்தால் திருவனந்தபுரம் மாநகராட்சி கூட்ட அரங்கு போர்க்களம் போல ஆனது. இந்த மோதலுக்களால் மாநகராட்சி கூட்டம் 5 நிமிடங்களில் முடிந்து விட்டது.

நாளை முதல் எரிபொருள் கட்டுப்பாடு நீக்கம்



சென்னை , ஜூன். 30:

பெட்ரோல், டீசல் விற்பனை மீதான கட்டுப்பாடுகள் நாளை முதல் நீக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. ஈரான் போரை தொடர்ந்து எரிபொருள் விநியோகத்தை நிர்வகிக்க வணிக மற்றும் தொழில்முறை நுகர்வோருக்கு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனையில் ஜூன் 12 முதல் ஒன்றிய அரசு கட்டுப்பாடு விதித்து இருந்தது. அந்த உத்தரவு அடிப்படையில் ஒரு வாகனத்திற்கு ஒரு நாளைக்கு 200 லிட்டர் டீசல் மட்டுமே விற்கப்பட வேண்டும் என்றும், தொழில், வணிக மற்றும் நிறுவன நுகர்வோர் சில்லறை விற்பனை நிலையங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதைத் தடை செய்தும் இருந்தது.

உலகளாவிய விநியோகத் தடைகளுக்கு மத்தியில் உள்ளூர் அளவில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே இந்தக் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. தற்போது ஈரான் போர் நிறுத்தப்பட்டு இருப்பதால் நமது நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் தற்போதைய விநியோக நிலைமையை ஆய்வு செய்த பிறகு, ஜூன் 12ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து அமல்படுத்துவது பொது நலன் கருதி இனி அவசியமில்லை என்று ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

எனவே மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (HSD) விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகத்தின் தற்காலிக ஒழுங்குமுறை ஆணை, 2026 இன் பிரிவு 3-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஒன்றிய அரசு தனது ஜூன் 12 தேதியிட்ட உத்தரவை ஜூலை 1 முதல் திரும்பப் பெறுகிறது என்று தெரிவித்து உள்ளது. இந்த உத்தரவு ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

தாவெக அமைச்சர் சரத்குமாரை ஏன் நீக்க வேண்டும் ?

சாதாரண ஒரு மனிதர் சட்டமன்ற உறுப்பினராகி, பின்பு அமைச்சரானதில் பல பேருக்கு வருத்தங்கள்,

தற்போது தமிழ்நாட்டில் பரப்பரப்பாக பேசப்படும் விஷயம், தவெக அமைச்சர் கில்லி சரத்குமார் அவர்களுடைய விஷயம், அமைச்சர் சரத்குமாரை ஏன் பதவி நீக்கம் செய்ய வேண்டும் ? அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னாடி செய்ததை இன்ஸ்டாகிராமில் போட்டு இருக்கிறார், தற்போது அவர் செய்யவில்லை ? அதேபோல் நமது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளின், முன்னாள் வாழ்க்கையையும், தற்போது உள்ள வாழ்க்கையையும், தீர விசாரித்தால் பல பேர் பதவியில் இருக்க முடியாது, கில்லி சரத்குமார் நினைத்திருந்தால் அதை அழித்திருக்கலாம் ? இதற்காக அமைச்சர் கில்லி சரத்குமார் அவர்கள் கொடுத்த விளக்கமும் ஏற்றுக்கொள்ளப் படாது, அது ஒரு வாழ்க்கை, இது ஒரு வாழ்க்கை, பதவி பிரமாணம் செய்த பிறகு அவர் தவறு செய்திருந்தால் தண்டிப்பதில் குற்றமில்லை, இரண்டு வருடங்களாக இன்ஸ்டாகிராமில் இருந்த இந்த பதிவை ஏன் இதுவரை யாரும் பகிரவில்லை, சாதாரண ஒரு மனிதர் சட்டமன்ற உறுப்பினராகி, பின்பு அமைச்சரானதில் பல பேருக்கு வருத்தங்கள் உள்ளதால், இதை செய்திருக்கிறார்கள் என ஏன் யாரும் எண்ணவில்லை ? ஆதலால் தமிழக முதல்வர் திருஜோசப் விஜய் அவர்கள், அமைச்சர் கில்லி சரத்குமார் விஷயத்தில் நல்ல முடிவு எடுப்பார் என பல பேர் எண்ணுகிறார்கள். அமைச்சர் சரத்குமார் கொலை செய்தாரா ? கொள்ளை அடித்தாரா ? கற்பழிப்பு செய்தாரா ? இல்லை மற்ற குற்ற செயல்களில் ஈடுபட்டாரா ? அந்த காலகட்டத்தில் போதைப்பொருள் விற்பனை ஆனதற்கு யார் காரணம் ? யார் குற்றவாளி ? இந்த செயல் நடக்கும் போது ஆளுங்கட்சியாக இருந்தது திமுக, தற்போது தங்கள் மேல் குற்றம் வந்து விடக்கூடாது என்பதற்காக போராட்டம் செய்கிறார்கள், என என்னத் தோன்றுகிறது. த.மு.தருமராஜா ஆசிரியர் - மக்கள் விருப்பம் இதழ் மாநிலத் தலைவர் - ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நலச்சங்கம் தமிழ்நாடு.

தூத்துக்குடி பெந்தேகொஸ்தே சபையின் தலைமை போதகர் கொலை வழக்கு குமரியை சேர்ந்த 3 பேருக்கு ஆயுள்.

தூத்துக்குடி மில்லர்புரத்தில் த பெந்தெகொஸ்தெ சபை இயங்கி வருகிறது. இந்த சபையின் தலைமை போதகராக சென்னை பெரம்பூர் மங்களபுரம் கிருஷ்ணதாஸ் ரோட்டை சேர்ந்த கனகராஜ் (73) என்பவர் பணியாற்றி வந்தார். இவர், பெந்தெகொஸ்தே சபையின் மத கோட்பாடு களை தீவிரமாக கடைப் பிடித்து வந்தார். அவரின் கீழ் பணி செய்யும் ஊழி யக்காரர்களிடமும் மத கோட்பாடுகளையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க கண்டிப்புடன் கூடிய அறிவுரை வழங்கி உள்ளார்.

2016ம் ஆண்டு இங்கு சபை ஊழியராக பணியாற்றிய கன்னியாகுமரி மாவட்டம் வெட்டூர்ணிமடம் வாத்தியார் விளையை சேர்ந்த டைட்டஸ் (41) என்பவர் சக பெண் ஊழியரிடம் தவறாக நடந்ததை, தலைமை போதகர் கனகராஜ் மற்ற ஊழியர்களிடம் தெரி வித்து கண்டித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த டைட்டஸ், உதவி போதகர் ஜான்தாமஸ் (57) ஆகியோர் தலைமை போதகர் கனக ராஜை கொலை செய்ய முடிவு செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து கடந்த 4.10.2016 அன்று கம்ப்யூட்டர் சர்வீஸ் கடை நடத்தி வரும் வாத்தியார் விளையை சேர்ந்த டைட்டசின் சகோதரர் அண்டோ (39), எலக்ட்ரானிக் விளம்பரம் தொழில் செய்து வரும் நாகர்கோவில் கோட்டார் ராமசாமிநகரை சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் ரகு (45) ஆகியோரை வரவழைத்து உள்ளனர். அன்றி ரவு சபையின் மாடியில் ஓலை கொட்டகையில் படுத்திருந்த தலைமை போதகர் கனகராஜை. அவர் தலைக்கு வைத்தி ருந்த தலையணையை எடுத்து முகத்தில் அழுத் தியும், கழுத்தை நெரித் தும் கொலை செய்தனர். பின்னர் அவரது உடலை குளிப்பாட்டி வேறு

உடை அணிந்து பிரார்த்தனை கூடத்துக்கு கொண்டு வந்து தடயத்தை மறைக்க முயன்று உள்ளனர். இந்த வழக் கில் அரசு தரப்பில் வழக்கு நிஜர் சேவியர் ஞானப்பிரகாசம் ஆஜரானார். மேலும் இந்த வழக்கில் கொலை யாளிகள் பயன்படுத்திய வழக்கு சொத்துக்களான கார், செல்போன்களை அரசுடைமையாக்கவும் உத்தரவிடப்பட்டு உள்ளது.

ஆப்கான் மீது பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல்

வேலூர், ஜூன். 29:

மத்திய கிழக்கில் போரை நிறுத்துவதற்காக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் ஒரு போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திய வெற்றியால் பாகிஸ்தான் பெருமிதம் கொண்டிருக்கும் வேளையில், பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது . 'இரட்டைத் தாக்குதல்' என அழைக்கப்படும் இந்தத் தாக்குதலில், ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் இஸ்லாமாபாத் படைகள் நடத்திய தரைவழி தாக்குதலில் குறைந்தது 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் பயங்கரவாதிகள் கொள்ளப்பட்டதாக பாகிஸ்தான் கூறுகிறது.

பாகிஸ்தானின் தாக்குதல்களால் பெண்கள், குழந்தைகள் உட்பட பல பொதுமக்கள் உயிரிழந்ததாகவும், காயமடைந்ததாகவும் ஆப்கானிஸ்தான் கூறியுள்ளது. மேலும், தங்கள் பிரதேசத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளனர் என்பதை காபூல் அதிகாரிகளும் பலமுறை மறுத்துள்ளனர். கிடைத்த தகவல்களின்படி, பாகிஸ்தான் விமானப்படை (PAF) விமானங்கள் இந்திய நேரப்படி அதிகாலை 12:30 மணிக்கு புறப்பட்டு, ஆப்கானிஸ்தானின் மூன்று மாவட்டங்களான பக்திகாவில் உள்ள கியான், பக்தியாவில் உள்ள சாம்கானி மற்றும் குனாரில் உள்ள மரவாரா ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் மசூதிகள் மீது தாக்குதல் நடத்தின.

முதல் குண்டுவீச்சு நடந்து வெறும் 25 நிமிடங்களுக்குப் பிறகு, அதிகாலை 12:55 மணிக்கு, புகைந்துகொண்டிருந்த இடிபாடுகளில் சிக்கியிருந்த பெண்களையும் அலறிக்கொண்டிருந்த குழந்தைகளையும் கிராமவாசிகளை மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது , பாகிஸ்தானிய விமானங்கள் மீண்டும் திரும்பி வந்து, ஆயுதமற்ற மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் மீது இரண்டாவது கட்டமாக குண்டுகளை வீசியுள்ளன. திட்டமிட்டு நடத்தப்பட்ட அந்த இரண்டாவது தாக்குதலே, இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என கூறப்படுகிறது.

அரசு ஊழியர்கள் சொத்துகள் வாங்கும் முன் முன்அனுமதி பெற வேண்டும் தமிழக அரசு நடத்தை விதிகளில் முக்கிய திருத்தம்!



ABSTRACT

Tamil Nadu Government Servants' Conduct Rules, 1973 -Rule 6(4)(a) and (aa), 7(1)(c), 7(2), 7(3)(d) and Rule 8(1)(a)(ii)of the Tamil Nadu Government Servants' Conduct Rules - Amendments - Issued.

PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (AD) DEPARTMENT

G.O. Ms.No.39 Date : 09-03-2010.
Thiruvaluvar Aandu-2041
Mee- 25.

ORDER:

The following notification shall be published in the Tamil Nadu Government Gazette

NOTIFICATION.

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Government Servants' Conduct Rules, 1973.

2. The amendments hereby made shall come into force on the 09th March 2010.

AMENDMENTS

In the said Rules,-

(1) in rule 6, in sub-rule(4),-

(i) in clause (a),-

(a) in the first proviso, for the expression "Rs.10,000/- (Rupees Ten thousand only)", the expression "his total monthly emoluments", shall be substituted;

(b) in the second proviso, for the expression "Rs.1,00,000/- (Rupees One lakh only)", the expression "Rs.3,00,000/- (Rupees Three lakhs only)" shall be substituted;

தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்களின் சொத்து பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973-ல் முக்கிய திருத்தங்களை மேற்கொண்டு அரசாணை (நிலை) எண் 39, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 09.03.2010-ஐ வெளியிட்டுள்ளது. இந்த திருத்தங்கள் 09.03.2010 முதல் அமலுக்கு வந்துள்ளன.

இந்த அரசாணையின்படி, அரசு ஊழியர்கள் அசையும் அல்லது அசையா சொத்துகளை வாங்குதல், விற்பனை செய்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது பிற வகையான சொத்து பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் முன், நடத்தை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்கு மேல் மதிப்புள்ள சொத்துகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரியிடம் முன்அனுமதி பெறுவது அல்லது முன்தகவல் வழங்குவது கட்டாயம் என விதிகள் திருத்தப்பட்டுள்ளன. மேலும், பணவீக்கம் மற்றும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இதற்கு முன் இருந்த நிதி வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன. அதேபோல், பரிசுகள் பெறுதல், அன்பளிப்புகள், அசையும் சொத்துகள் வாங்குதல் அல்லது விற்பனை செய்தல், குடும்ப உறுப்பினர்களின் பெயரில் மேற்கொள்ளப்படும் சொத்து பரிவர்த்தனைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கும் அறிவிப்பு மற்றும் அனுமதி தொடர்பான நிதி வரம்புகள் திருத்தப்பட்டுள்ளன. அரசு ஊழியர்கள் தங்களது மாத ஊதியம் மற்றும் பதவிக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் அரசாணை வலியுறுத்துகிறது.

மேலும், அரசு ஊழியர்கள் தங்களது சொத்து பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்களை மறைப்பது, விதிகளுக்கு முரணாக முன்அனுமதி பெறாமல் சொத்துகளை வாங்குவது அல்லது தவறான தகவல்களை வழங்குவது தமிழ்நாடு அரசு பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு வழிவகுக்கும் என்றும் அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இந்த திருத்தத்தின் நோக்கம் அரசு நிர்வாகத்தில் வெளிப்படத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதாகும்.